செப்டம்பர் 2022 இதழ் 8

# பாலர் முரசு

MCI (P) 035/10/2021




ஆக்கம்: தமிழ் முரசு
TAMIL MURASU
VOICE OF THE COMMUNITY

ஆதரவு: bilingualism.sg
இருமொழிக் கல்விக்கான லீ குவான் யூ நிதி

# வணக்கம்!

பிள்ளைகளே, மற்ற நாடுகளில் வசிக்கும் நண்பர்கள், வெவ்வேறு மொழிகளில் எவ்வாறு ‘வணக்கம்’ சொல்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வோமா?

கியூஆர் குறியீட்டை வருடுக.




படங்கள்: வெக்டீசி

*ஆசிரியர் அல்லது பெற்றோருக்கான குறிப்பு:* சொற்களின் சரியான உச்சரிப்புக்கு இணையத்தை நாடலாம்.


# நான் ஓர் உலக அதிசயம்!











சீனப் பெருஞ்சுவர் படையெடுப்புகளிலிருந்து சீனப் பேரரசைக் காப்பதற்காகக் கட்டப்பட்டது.
The Great Wall of China was built to protect the Chinese empire from enemy attacks.




சிச்சென் இட்சா மெக்சிக்கோவில் உள்ளது. 'இட்சா' என்ற மாயா பழங்குடியினர் இதைக் கட்டியதாக நம்பப்படுகிறது.
Chichen Itza is situated in Mexico. It is believed to be found by a Mayan tribe 'Itza'.

படங்கள்: வெக்டீசி

ஆசிரியர் அல்லது பெற்றோருக்கான குறிப்பு: மற்ற உலக அதிசயங்களைப் பற்றிப் பிள்ளைகளுடன் கலந்துரையாடலாம்.



நட்சத்திர நண்பர்கள்
கியூஆர் குறியீட்டை வருடுக.
நட்டு ஒரு நட்சத்திர மீன். அது தனியாக வாழ்ந்து வந்தது. இதனால் நட்டு எப்போதும் சோகமாக இருந்தது.
எனக்கு நண்பர்களே இல்லை!
மிட்டு ஒரு நட்சத்திரம். அது வானத்தில் தனியாக மின்னியது. இதனால் எப்போதும் சோகமாக இருந்தது.
எனக்கு நண்பர்களே இல்லை!
4


ஒருநாள் நட்டுவை மிட்டு பார்த்துவிட்டது.
ஹலோ நண்பா! என் பெயர் மிட்டு! உன்னால் அந்தக் கடலுக்கே அழகு!
நன்றி நண்பா! என் பெயர் நட்டு. உன்னால் அந்த வானத்துக்கே அழகு!
அன்றுமுதல் நட்டுவும் மிட்டுவும் நண்பர்கள் ஆயின.
பிள்ளைகளே! உங்களின் நெருங்கிய நண்பரை முதன்முதலில் எங்கே சந்தித்தீர்கள்? அதைப் பற்றிப் பேசலாமா?
5

# நகரும் நட்சத்திரம்

பிள்ளைகளே, அழகான நட்சத்திர மீன் ஒன்றைச் சேர்ந்து செய்து பார்ப்போமா!

கியூஆர் குறியீட்டை வருடுக.




1. வண்ணத் தாளில் இதுபோல் ஐந்து வடிவங்களை வெட்டி அவற்றில் ஓட்டை போடவும்.



2. பருத்திக் குச்சியை வண்ணத்தில் தொட்டு இவ்வாறு சிறிய புள்ளிகள் வைக்கவும்.



3. சாயம் காய்ந்தவுடன் ஐந்து வடிவங்களையும் இவ்வாறு சேர்த்து இணைத்திடவும்.



4. இணைக்கப்பட்ட தாள்களை இவ்வாறு விரித்து வைத்தால், நட்சத்திர மீன் தயார்!

படங்கள்: பின்ட்ரஸ்ட்



*ஆசிரியர் அல்லது பெற்றோருக்கான குறிப்பு: வெவ்வேறு நிறங்களில் நட்சத்திர மீன்களைச் செய்ய ஊக்குவிக்கலாம்.*

# நான் யார்?

பிள்ளைகளே! நாடுகளுக்குத் தேசிய விலங்கு உண்டு என்று உங்களுக்குத் தெரியுமா? கீழே தரப்பட்டுள்ள தகவல்களுடன் சரியான விலங்கை இணையுங்கள். பின்னர் வண்ணம் தீட்டி மகிழுங்கள்!


நான் சிங்கப்பூரின் தேசிய விலங்கு.
நான் காட்டுக்கு அரசன்.
நான் மிகச் சத்தமாக கர்ஜிப்பேன்.
நான் யார்?



நான் தாய்லாந்தின் தேசிய விலங்கு.
நான் பெரிதாக இருப்பேன்.
தண்ணீர் குடிக்க என் தந்தத்தைப் பயன்படுத்துவேன்.
நான் யார்?




நான் சீனாவின் தேசிய விலங்கு. மூங்கில் சாப்பிட எனக்கு மிகவும் பிடிக்கும். ஒவ்வொரு நாளும் நான் தொடர்ந்து 12 மணிநேரம் சாப்பிடுவேன்.
நான் யார்?



நான் இந்தியாவின் தேசிய விலங்கு.
நான் மற்ற விலங்குகளை வேட்டையாடுவேன். என் உடல் மேல் கறுப்புக் கோடுகள் இருக்கும்.
நான் யார்?



நான் ஆஸ்திரேலியாவின் தேசிய விலங்கு. நான் குதித்துக் குதித்துச் செல்வேன். எதிரிகளை என்னால் பலமாக உதைக்க முடியும்.
நான் யார்?



*ஆசிரியர் அல்லது பெற்றோருக்கான குறிப்பு:* *வெவ்வேறு நாடுகளின் தேசிய மலர், தேசிய பறவை, தேசிய உணவு ஆகிய தகவல்களையும் பிள்ளைகளுடன் பகிர்ந்துகொள்ளலாம்.*

# யானை வருது

ஆசிரியர் அல்லது பெற்றோருக்கான குறிப்பு: 'யானை வருது' என்னும் கவிதை வரிகளைப் பிள்ளைகள் ஓசைநயத்துடன் வாசிக்க உதவவும். கவிதைக்கு ஏற்ப உடல் அசைவுகளைச் செய்திடப் பிள்ளைகளுக்கு உதவலாம்.

கியூஆர் குறியீட்டை வருடுக.

யானை வருது, யானை வருது
பார்க்க வாருங்கோ.

அசைந்து, அசைந்து நடந்து வருது
பார்க்க வாருங்கோ.

கழுத்து மணியை ஆட்டி வருது
பார்க்க வாருங்கோ.


காதைக் காதை அசைத்து வருது
பார்க்க வாருங்கோ.

நெற்றிப் பட்டம் கட்டி வருது
பார்க்க வாருங்கோ.

நீண்ட தந்தத்தோடே வருது
பார்க்க வாருங்கோ.

தும்பிக்கையை வீசி வருது
பார்க்க வாருங்கோ.

தூக்கி 'சலாம்' போட்டு வருது
பார்க்க வாருங்கோ.



- குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

Published and printed by SPH Media Limited. Co. Regn. No. 202120748H.

Customer Service (Circulation): 6388-3838, circs@sph.com.sg. Fax 6746-1925.